நகராட்சிகளில் வசூல் செய்ய வேண்டுமென்று பல நகராட்சியர்கள் சொல்கிறார்கள். ஆகவே நகராட்சியர்களுடைய விருப்பத்திற்கிணங்க வரித்தண்டலர்கள் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் எந்த நகராட்சியை கருத்திலே கொண்டு சொல்கிறார் என்று தெரிந்தால் அந்த நகராட்சியிலே இது பற்றி நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

93-

மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்குக் கிடைக்கும் சர்க்கரையின் அளவை அதிகரித்தல்

** 12502*–திரு. **ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) தமிழகத்திற்கு மாதந்தோறும் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் சர்க்கரையின் அளவு எவ்வளவு?

(ஆ) இதை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) (ஆ) மற்றும் (இ): தமிழகத்திற்கு மாதந்தோறும் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் லெவி சர்க்கரையின் அளவு 23,674 டன். அதுபோக அக்டோபர் நவம்பர் மாதங்களில் பண்டிகை ஒதுக்கீடாக 6800 மெட்ரிக் டன் நமக்குக் கிடைக்கிறது. இந்த அளவை உயர்த்த வேண்டுமென்று, சுமார் 31,000 மெட்ரிக் டன்னாக உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம்.

முற்பகல் 10.45

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு வழங்கும் சர்க்கரையின் அளவு மாநிலத்திற்கு மாநிலம்

1993 மார்ச் 16]

வேறுபடுகிறதா? மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் இன்றைக்கு உணவு உற்பத்தியில் நாம் உபரியாக இருப்பதைப் போல சர்க்கரை உற்பத்தியிலும் உபரி மாநிலமாக நம்முடைய மாநிலம் விளங்குவதால் நம்முடைய மாநிலத்திற்கு வழங்கப்படுகிற சர்க்கரையினுடைய அளவை மிக அதிகமாக அதிகரிக்க வேண்டுமென்று மத்திய அரசை நமது அரசு கோருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்தியில் நாம் உபரியாக இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல உணவு உற்பத்தியில் நாம் உபரி மாநிலம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசு லெவி சர்க்கரை ஒதுக்கீட்டில் நபர் ஒன்றுக்கு மாதத்திற்கு 425 கிராம் என்று கணக்குப்போட்டு நமக்கு இப்போது சர்க்கரையை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை 500 கிராமாக அதாவது அரை கிலோவாக உயர்த்த வேண்டும் என்றும் அதேபோல் மக்கள் தொகை அடிப்படையிலே அவர்கள் கொடுக்கிறபோது 1986 ஆம்ஆண்டு இருந்த மக்கள் தொகையை அடிப்படையாக வைத்துத்தான் கொடுக்கிறார்கள். அதையும் மாற்றிக்கொடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசை நாம் கேட்டிருக்கிறோம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிற சர்க்கரையினுடைய அளவைப் பொறுத்தவரையில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அளவுகோலாக வைத்திருப்பதாகவும், 1986 ஆம் ஆண்டு சென்சஸை அடிப்படையாக வைத்துத்தான் அது வழங்கப்படுவதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் இப்போது 1991 ஆம் ஆண்டு சென்ஸஸ் முடிந்துவிட்ட காரணத்தால் அந்த அடிப்படையில் வழங்க மத்திய அரசை நம்முடைய அரசு வலியுறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நடந்த தென் மாநில உணவு அமைச்சர்கள் கூட்டத்திலும், டெல்லியில் நடந்த உணவு அமைச்சர்கள் கூட்டத்திலும் இதை வலியுறுத்திக் கேட்டிருக்கிறோம். அதுபோக மத்திய உணவு அமைச்சருக்கு இங்கே இருந்து கடிதம் மூலமாகவும்

இந்த அளவை உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். நாம் அளவை உயர்த்தச் சொல்லிக் கேட்டோம், ஆனால் அண்மையில் விலையைத்தான் மத்திய அரசினர் உயர்த்தி இருக்கிறார்கள். ஆனாலும் அன்றைக்கு அமைச்சராக இருந்த மாண்புமிகு தருண்கோஹா அவர்கள் நம்முடைய வேண்டுகோளைப் பரிசீலிப்பதாகக் கடிதம் ஒன்றை எழுதி இருக்கிறார்கள். அது அந்த அளவில் நிற்கிறது. இன்னும் நமக்கு அது உயர்த்தி வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

94-

தேயிலைத் தோட்ட நிறுவனத்தில் தொழிலாளர்களின் படித்த குழந்தைகளுக்கு வேலைவாய்ப்பு.

*11506-**டாக்டர் அ. ஸ்ரீதரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் படித்த குழந்தைகளுக்கு தேயிலைத் தோட்ட நிறுவனங்களிலேயே அவர்களின் படிப்புத் தகுதிக்கு ஏற்ப வேலை கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு தோட்ட நிறுவனங்களில் அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப வேலை வாய்ப்பு வழங்க தோட்ட நிறுவனச் சட்டம் 1951 மற்றும் அதன் விதிகளில் வழிவகை ஏதுமில்லை. அவ்வாறு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. Tamil Nadu State Labour Advisory Board; State Apprenticeship Council;